கலை

சூ

# பன்முகக் கலைஞர்




இயற்பெயர் மறைந்து இட்டபெயர் நிலைக்கும் அளவுக்குக் கலைஞர் மு.கருணாநிதி அவர்களை அடையாளப்படுத்தித் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது கலை! அவரைப்பற்றிப் பேராசிரியர் அன்பழகனார், "கலைஞர்பகுத்தறிவுக்கொள்கைபரப்பும்சிந்தனையாளர்; பழுமரக்கனிப் பயன்கொள்ளும் பேச்சாளர்; படித்தவரைக் கவரும் ஆற்றல்கொண்ட எழுத்தாளர்; கலைத்துறையில் வாகைசூடிய படைப்பாளர்; தொட்டது துலங்கத் துறைதோறும் தம் முத்திரை பதிக்கும் திறமையாளர்; முத்தமிழிலும் வல்ல வித்தகர்; செந்தமிழுக்கொரு தீமை எனில் தம்முயிரும் தந்திடத் துணியும் தியாகத் திருவுருவம்!" என்பார்.

## குழந்தை உள்ளக் கலைஞர்

"நானும் தங்கையும் மழையைக் கண்டாலே மயில் போலக் குதிப்போம் முன்பெல்லாம். மழைத்துளிகளிலே நிற்பதைவிட ஆனந்தம் வேறு இல்லை என்று எண்ணுவோம். 'உடம்புக்கு ஆகாது. உள்ளே வாங்க' என்று பாட்டி அன்பாகக் கோபிக்கிற வரையிலே மழையிலே நனைந்துகொண்டு ஆடுவோம்; பாடுவோம். வீட்டுக்குள்ளே வந்துவிட்டால்கூட, திண்ணையிலே அமர்ந்து மழையை இரசிப்போம். தெருவிலே சிறுசிறு வாய்க்கால்கள் போல நெளிந்தோடும் மழைத் தண்ணீரிலே நாங்கள் மிதக்க விட்டிருக்கிற காகிதப் படகுகள் – எவ்வளவு!"

தாம் எழுதிய புதையல் என்னும் புதினத்தில் குழந்தை உள்ளத்துடன் இவ்வாறு பதிவு செய்திருப்பார் கலைஞர். படிக்கும் வாசகர் மனமும் கூடவே மழையில் நனையும்!

இசை முகிழ்த்த புலமும் வேளாண் செழித்த நிலமுமான திருவாரூர் மாவட்டத்தின் எழில் சூழ்ந்த சிற்றூர் திருக்குவளை. அவ்வூரில் 1924ஆம் ஆண்டு சூன் திங்கள் 3ஆம் நாள், ஏரால் நிலத்தையும் நாவால் தமிழையும் பண்படுத்திய விவசாயக்கவிஞர் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மூன்றாவது மகவாகப் பிறந்தார் கலைஞர் கருணாநிதி.

## போராட்டக் கலைஞர்

தாம் பிறந்த திருக்குவளையில் தொடக்கக் கல்வியை நிறைவுசெய்த கலைஞர், திருவாரூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். அங்குதான் தமக்கு அரசியல் அரிச்சுவடியாக அமைந்த ஒரு புத்தகத்தைத் துணைப்பாடமாகப் படித்தார் மாணவர் கலைஞர். 1921இல் சென்னை மாகாணத்திற்கு நீதிக்கட்சியின் சார்பில் முதல் அமைச்சராக இருந்த பனகல் அரசரின் சாதனைகளைக் கூறும் நூல் அது.

பள்ளி முடிந்த மாலைவேளைகளில் தாம் எழுதிய 'வாருங்கள் எல்லோரும் போருக்குச் சென்றிடுவோம்!' என்று தொடங்கும் பாடலை முழங்கியபடி, இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட மாணவர்களைத் திரட்டித் திருவாரூர் வீதிகளில் ஊர்வலம் வந்தபோது அவருக்கு வயது பதினான்கு.

போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்! அந்தப் போராட்டப் பண்பே அவருக்குள் இருந்த கலைத்தன்மையை வளர்த்தது.

## பேச்சுக் கலைஞர்

இளமைப்பருவத்திலேயே தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துகள் கலைஞரை ஈர்த்தன; பட்டுக்கோட்டை அழகிரி, அறிஞர் அண்ணா ஆகியோரின் பேச்சாற்றல் அவரைக் கவர்ந்தது. மேடைப்பேச்சினில் பெருவிருப்பம் கொண்ட அந்தக் கிராமத்து இளைஞர், 'நட்பு' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு பலராலும் பாராட்டப்பட்டது. பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்குப் பேச்சுப்பயிற்சி அளிப்பதற்காகச்



10th_Tamil_Unit 6_ Folder.indd 128 02/03/2024 12:16:46